# தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை
# பதவி வெற்றிடங்கள்

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன:

**01. பதவிப் பெயர் :- முகாமையாளர் (மனித வள)**
**சேவை வகுதி :- "கனிட்ட முகாமையாளர்"**
**பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை :- 01**

**01.1. தகைமைகள்**

**01.1.1. வெளிவாரி விண்ணப்பகாரர்கள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மனிதவள முகாமைத்துவம் என்ற பாடத்துறையில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

*அத்துடன்*

மேலே குறிப்பிடப்பட்ட இளமானிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் சம்பந்தப்பட்ட துறையில் 01 வருட கால அனுபவமொன்றைப் பெற்றிருத்தல்.

**01.1.2. உள்வாரி விண்ணப்பகாரர்கள்**

I. மேலே குறிப்பிடப்பட்ட வெளிவாரி விண்ணப்பகாரர்களுக்குரிய தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

*அல்லது*

II. முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் சாராத சேவை வகுதியில் தரம் ஐஐ இல் துறைக்குரிய பதவியொன்றில் குறைந்தபட்சம் 05 வருட திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

III. முகாமைத்துவ உதவியாளர் - தொழிநுட்ப சேவை வகுதியில் தரம் ஐஐ இல் துறைக்குரிய பதவியொன்றில் ஆகக் குறைந்தது 05 வருட திருப்திகரமான சேவைக் காலமொன்றைப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

IV. செயல்வலுப்படுத்தல்.'. தொழிற்பாட்டு.'. விரிவாக்கல் அலுவலர் சேவை வகுதிக்குரிய பதவியொன்றில் 08 வருட திருப்திகரமான சேவைக் காலமொன்றைப் பூர்த்தி செய்திருத்தல்.

**01.2. சம்பள வகுதி – துஆ 1-1**

**01.3. சம்பள அளவுத்திட்டம் -**

(ரூ.42,600 – 10 ஒ 755 – 18 ஒ 1,135 - ரூ.70,580.'.-)

(சம்பளம் தவிர, அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் செலுத்தப்படும்.)

**01.4. வயதெல்லை -**

22 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பகாரர்களுக்கு ஆகக்கூடிய வயதெல்லை ஏற்புடையதாகாது.

**02. பதவிப் பெயர் :- நிருவாக அலுவலர்**
**சேவை வகுதி :- "கனிʻட முகாமையாளர்"**
**பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை :- 01**

**02.1. தகைமைகள்**

**02.1.1. வெளிவாரி விண்ணப்பகாரர்கள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட, முகாமைத்துவம்∴ வணிகவியல் ஆகிய பாடங்களில் ஏதேனுமொன்றில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

*அத்துடன்*

மேலே குறிப்பிடப்பட்ட இளமானிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் உரிய துறையில் 01 வருட கால அனுபவமொன்றைப் பெற்றிருத்தல்.

**02.1.2. உள்வாரி விண்ணப்பகாரர்கள்**

I. மேலே குறிப்பிடப்பட்ட வெளிவாரி விண்ணப்பகாரர்களுக்குரிய தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

*அல்லது*

II. முகாமைத்துவ உதவியாளர் - தொழிநுட்பம் சாராத சேவை வகுதியில் தரம் ஐஐ இல் உரிய துறைக்குரிய பதவியொன்றில் ஆகக் குறைந்தது 05 வருட திருப்திகரமான சேவைக் காலமொன்றைப் பூர்த்தி செய்திருத்தல்.

*அல்லது*

III. முகாமைத்துவ உதவியாளர் - தொழிநுட்ப சேவை வகுதியில் தரம் ஐஐ இல் உரிய துறைக்குரிய பதவியொன்றில் ஆகக் குறைந்தது 05 வருட திருப்திகரமான சேவைக் காலமொன்றைப் பூர்த்தி செய்திருத்தல்.

*அல்லது*

V. செயல்வலுப்படுத்தல்∴ தொழிற்பாட்டு∴ விரிவாக்கல் அலுவலர் சேவை வகுதிக்குரிய பதவியொன்றில் 08 வருட திருப்திகரமான சேவைக் காலமொன்றைப் பூர்த்தி செய்திருத்தல்.

**02.2. சம்பள வகுதி – துஆ 1-1**

**02.3. சம்பள அளவுத்திட்டம் -**

(ரூ.42,600 – 10 ஒ 755 – 18 ஒ 1,135 - ரூ.70,580∴-)

(சம்பளம் தவிர, அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் செலுத்தப்படும்.)

**02.4. வயதெல்லை -**

22 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பகாரர்களுக்கு ஆகக்கூடிய வயதெல்லை ஏற்புடையதாகாது.

03. பதவிப் பெயர் :- முகாமைத்துவ உதவியாளர்
சேவை வகுதி :- "முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் சாராத"
பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை :- 02

## 03.1. தகைமைகள்

### 03.1.1.வெளிவாரி விண்ணப்பகாரர்கள்

(அ) கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில்,

ை. சிங்களம் ∴ தமிழ்
ைை. கணிதம்

ஆகிய பாடங்கள் உள்ளிட்ட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(ஆ) கல்விப் பொதுத் தராதர (உயர்தரப்) பரீட்சையில் ஆகக்குறைந்த மூன்று(03) பாடங்களில் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல்.

(கணினி சொல் முறைவழியாக்கம் (ஊழஅிரவநச றுழசன ீசழஉநளளளைெ).∴ தட்டச்சுசெய்தல் பற்றிய மூன்றாம்நிலை மற்றும் வாழ்க்கைத்தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் பாடநெறியொன்றைப் பயின்றிருத்தல் அல்லது வேறு அதற்கு நிகரான மட்டத்திலுள்ள திறன்கள்)

### 03.1.2 உள்வாரி விண்ணப்பகாரர்கள்

(அ) தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் முதனிலை தரம் - தொழில்நுட்பம் சாராத, பகுதியளவு தொழில்நுட்பம் சார்ந்த, தொழில்நுட்ப சேவை வகுதிகளில் பின்வரும் 'ஆ', 'இ', 'உ' தகைமை பெற்றுள்ள ஊழியர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

(ஆ) கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில்,

ை. சிங்களம் ∴ தமிழ்
ைை. கணிதம்

ஆகிய பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(கணினி சொல் முறைவழியாக்கம்.∴ தட்டச்சு செய்தல் பற்றிய மூன்றாம்நிலை மற்றும் வாழ்க்கைத்தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் பாடநெறியொன்றைப் பயின்றிருத்தல் அல்லது வேறு அதற்கு நிகரான மட்டத்திலுள்ள திறன்கள்)

(இ) சேவையில் நிரந்தர நியமனம் வகிக்க வேண்டுமென்பதோடு, அந்நியமனங்களில் உறுதிசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஈ) உரிய திகதிக்கு உடன் முந்திய நிரந்தர நியமனமொன்றில் குறைந்தபட்சம் 05 வருட தொடர்ச்சியான, திருப்திரகரமான சேவைக் காலமொன்றைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு (ஐ)**

யாதேனுமொரு பதவிக்கு நிரந்தரமாக நியமிக்கப்பட முன்னர் சேவையாற்றியுள்ள அல்லது யாதேனுமொரு பதவிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுவதற்கான ஒரு நிபந்தனையாக சேவையாற்றியுள்ள பயிற்சிக் காலப்பகுதியொன்று மேலே (ஈ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்றுக்கொள்ளும் ஐந்தாண்டு காலப்பகுதிக்கு கணிப்பிடப்பட மாட்டாது. யாதேனுமொரு பதவிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுவதற்கு முன்னர் சேவையாற்றியுள்ள தற்காலிக.∴ அமய சேவைக் காலப்பகுதிகளை மேலே 'ஈ' பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்றுக்கொள்வதற்கான ஐந்தாண்டு காலப்பகுதிக்காக கணிப்பிடப்பட மாட்டாது.

**03.2 சம்பள வகுதி – ஆயு 1-1**

**03.3 சம்பள அளவுத்திட்டம் -**

(ரூ.27,910 – 10 ஒ 300 – 7 ஒ 350 – 4 ஒ 495 – 20 ஒ 660 – ரூ.48,540.:.-)

(சம்பளம் தவிர, அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் செலுத்தப்படும்.)

**03.4 வயதெல்லை -**

18 வயதுக்குக் குறையாதவராகவும்,45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பகாரர்களுக்கு ஆகக்கூடிய வயதெல்லை ஏற்புடையதாகாது.

<u>வேறு:</u>

விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும் இலங்கைப் பிரசையாயிருத்தல் வேண்டுமென்பதோடு, நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கேற்ற உடல் மற்றும் உள ஆரோக்கியம் கொண்ட, மிகச் சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

**<u>விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித் திகதியன்று எல்லா வகையிலும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.</u>**

<u>விண்ணப்பங்களை அனுப்பிவைப்பதற்கான மொழிமூலம்</u>

விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும் ஆங்கில மொழியில் மாத்திரம் தமது விண்ணப்பங்களை அனுப்பி வைத்தல் வேண்டும்.

<u>ஆட்சேர்ப்பு முறை</u>

ஆட்சேர்ப்பு அதிகாரியினால் முடிபுசெய்யப்படுகின்றவாறு எழுத்துமூல போட்டிப் பரீட்சையொன்றின் அத்துடன்.:. அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

<u>நியமனத்தின் தன்மை</u>

நிரந்தரமானது. ஊழியர் சேமலாப நிதியத்திற்கும், ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்திற்கும் உரித்துடையது.

<u>விண்ணப்பக் கட்டணம்</u>

வெளிவாரி விண்ணப்பகாரர்கள் மாத்திரம் விண்ணப்பக் கட்டணமாக ரூ.500.00 தொகையை நாட்டின் எந்தவோர் அஞ்சல் அலுவலகத்திலும் 'தவிசாளர், தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை'' என்ற பெயருக்கு செலுத்தி வரையப்பட்ட **<u>சாதாரண காசுக் கட்டளையொன்றை</u>** விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பிவைத்தல் வேண்டும். அதன் கொடுப்பனவு அலுவலகமாக **"இராஜகிரிய அஞ்சல் அலுவலகம்''** என்ற பெயர் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்பக் கட்டணம் மீளளிப்புச் செய்யப்பட மாட்டாது.

உங்கள் தகவல்களை ''யு4'' அளவிலான தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி சபையின் இணையத்தளத்திலுள்ள (றறற.ெனைஉடி.பழஎஇடம) மாதிரிப் படிவத்தைப் பூரணப்படுத்தி உறையின் இடப்பக்க மேல் மூலையில் தயவுசெய்து விண்ணப்பிக்கும் பதவியைத் தெளிவாகக் குறிப்பிட்டு சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகளுடன் **2020.09.14 ஆந் திகதி அல்லது அத்திகதிக்கு முன்னர் தவிசாளர், தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை, இல.383, கோட்டே வீதி, இராஜகிரிய** என்ற முகவரிக்குக் கிடைக்கக்கூடியதாக **பதிவு அஞ்சலில்** அனுப்பி வைக்கவும். அரச கூட்டுத்தாபனங்களில் அல்லது நியதிச்சட்ட சபைகளில் பணிபுரியும் ஊழியர்கள் தமது விண்ணப்பங்களை தாபன.:. திணைக்களத் தலைவர் ஊடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஒழுங்காகப் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்களும், காசுக் கட்டளை இணைக்கப்படாத விண்ணப்பங்களும், மாதிரி விண்ணப்பம் இல்லாத விண்ணப்பங்களும், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.
ஆட்சேர்ப்புக்கள் சம்பந்தமாக சபையினால் எடுக்கப்படும் முடிபு இறுதியானதாகும்.

**தவிசாளர்,**
**தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை,**
**இல.383, கோட்டே வீதி,**
**இராஜகிரிய.**

பதிப்பிக்கும் திகதி: 2020.08.30